# கிருபையுள்ள வார்த்தை®

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22


VOL - 25 | நவம்பர் NOVEMBER | 2024

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-






ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 8 |
| வாலிபர் பகுதி | 10 |
| சிறுவர் பகுதி | 11 |


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7.00 மணி**

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)


*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் **B.** கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் **V.** சுப்பிரமணியன் M.A., B.L.


இந்த மாதம் பிறந்த நாள்
மற்றும் திருமண நாள் காணும்
வாசகர்கள் அனைவருக்கும்
அன்பின் வாழ்த்துக்கள்...





நமது
**'கிருபையின் கீதங்கள்'**
பாடல் புத்தகம்
புதிய பதிப்பு
ஆயத்தமாக உள்ளது.

554 தமிழ் பாடல்கள்
40 ஆங்கில பாடல்கள்
112 சேர்ந்திசை பாடல்கள்
464 பக்கங்கள்

வேண்டுவோர் தொடர்புகொள்ளவும் : **92443 14431, 999 426 7004**

**கிருபையுள்ள வார்த்தை**
மனந்திரும்புதலை உண்டாக்கும் உண்மையுள்ள வார்த்தை

YouTube
@graciouswordcoc



**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

ஆசிரியர் உரை

Dr. P.C. பிலேமோன் ராஜா



# தேவனுக்கேற்ற துக்கம்

## GODLY SORROW

பிரியமான, கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில், எனது இனிதான வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்!

பத்து மாதங்கள் வேகமாக பறந்தோடி போய்விட்டது. இந்த ஆண்டு முடிய இன்னும் ஏறக்குறைய 50 நாட்களே இருக்கின்றது. இந்த நேரத்தில் இந்த ஆண்டு முழுவதும் நாம் கர்த்தரை துக்கப் படுத்தியிருக்கின்றோமா? என கேள்வி கேட்டால், எல்லாருடைய பதிலும், 'ஆம்' என்பதாகத்தான் இருக்கும். அப்படியென்றால், 'அவருடைய அந்த துக்கத்தினை நான் சரிசெய்வது எப்படி?' என இன்னொரு கேள்வியும், ஆவலும் நமக்குள் எழும். அதற்கான பதில் தான் நாம் **'தேவனுக்கேற்ற துக்கம்'** அடைவது; அதனைக் குறித்து இந்த மாதம் கர்த்தருடைய வார்த்தையின் வெளிச்சத்தில் ஆழமாக தியானம் செய்வோம்!

### தேவனுக்கேற்ற துக்கம் ஏன்?

**2கொரிந்தியர் 7:9,10** இப்பொழுது சந்தோஷப்படுகிறேன; நீங்கள் துக்கப்பட்டதற்காக அல்ல, மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப்படாதபடிக்கு, தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்களே. தேவனுக்கேற்ற துக்கம், பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல், இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ, மரணத்தை உண்டாக்குகிறது. நான் ஏன் தேவனுக்கேற்ற துக்கமடைய வேண்டும்? நான் கர்த்தருக்கு உகந்த துக்கப்படுவதினால் உண்டாகும் பலன் என்ன?

கர்த்தருக்கு உகந்த துக்கம் என்பது, அந்த நபரை, மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் செய்கின்றதாக இருக்கின்றது. இப்புவியில் வாழும் நாட்களிலும், நம்முடைய நித்தியத்தினைக் குறித்து வருத்தப்பட வேண்டியதில்லை **(நீதி.5:11-14)**; மரணத்திற்கு பின்பு பாதாளத்திலே வருத்தப்பட வேண்டியதில்லை **(லூக்கா 16:24,27)**; ஞானவான்களாக செயல்படுவதால், நியாயத் தீர்ப்பிலும் வருத்தப்பட வேண்டியதில்லை **(நீதி. 29:1, ரோமர் 8:1)**. ஏனெனில், கர்த்தருக்கு உகந்த துக்கம், நம்மில் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகின்றது.

பேதுரு **(மத்தேயு 26:75)**, இளைய குமாரன் **(லூக்கா 15:18-23)** போன்றோர், கர்த்தருக்கு உகந்த துக்கம்கொண்டதினால், பின்பு மனஸ்தாபப்பாடமல், இரட்சிப்பிற்கு ஏதுவான மனந்திரும்புதலை கண்டடைந்தனர். காணாமல் போன ஆடு, வெள்ளிக்காசு உவமைகள் **(லூக்கா 15:1-10)** நமக்கு சொல்லுகின்ற பாடமும் அது தான். **லூக்கா 15:7,10** அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். மனந்திரும்புதலுக்குள் என்ன இருக்கின்றது? அது எவைகளை உள்ளடக்கியுள்ளது? மனந்திரும்புதல் என்பது கர்த்தருடைய கட்டளை **(அப்போ. 17:30)**;

மனுக்குலத்திற்கு அவர் கொடுத்த மறுவாய்ப்பு **(அப்போஸ்தலர் 8:22)**; அது மறுவாழ்வு **(யோனா 3)**; அது மகிழ்ச்சியானது **(லூக்கா 15:1-10)**; குறித்த காலம் மாத்திரமே கொண்டது **(எபிரெயர் 12:17)**; இப்படிப்பட்ட விடுதலைக் கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்கி, நம்மை மனஸ்தாபத்தில் இருந்து காக்கின்றது. ஆகையால் தான், நாம் 'கர்த்தருக்கு உகந்த துக்கம்' அடைய வேண்டும். 'கர்த்தருக்கு உகந்த துக்கம்' என்ன என்பதை நான் எப்படி கண்டறிவது? என வினவினால், அதற்கும் பரிசுத்த ஆவியானவர், பரிசுத்த வசனங்களின் வாயிலாக பதில் தருகின்றார். அவற்றினை ஏழு காரியங்களினால் நாம் அறிந்துக்கொள்ள முடியும். அந்த ஏழு காரியங்களையும் பட்டியலிடுகின்றார். **2 கொரிந்தியர் 7:11** பாருங்கள், நீங்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்ததுண்டே; அது உங்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையையும், குற்றந்தீர எவ்வளவு நியாயஞ்சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்திவைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கிற்று. இந்தக் காரியத்திலே நீங்கள் எல்லாவிதத்திலும் உங்களைச் சுத்தவான்களென்று விளங்கப்பண்ணினீர்கள்.

**1. எவ்வளவு ஜாக்கிரதையையும் (பாவத்தினை பற்றிய விழிப்புணர்வு):**

கர்த்தருக்கு உகந்த துக்கம் என்பது முதலாவதாக, ஒருவருக்குள் மிக அதிக ஜாக்கிரதையை உண்டாக்குகின்றது. எதைப் பற்றிய ஜாக்கிரதை? பாவத்தினைக் குறித்த ஜாக்கிரதை. அதாவது பாவத்தினைப் பற்றிய விழிப்புணர்வினை உண்டாக்குகின்றது. ஏனெனில், கொரிந்து மக்கள் பாவத்தினைப் பற்றிய அலட்சியத்தில் இருந்தனர் **(1கொரிந்தியர் 5)**. இன்றைய நாட்களிலும் பாவத்தினைப் பற்றிய விழிப்புணர்வு மிகவும் அவசியமானதாக இருக்கின்றது. மேலும் அந்த விழிப்புணர்வு எல்லா காலத்திலும், எல்லாருக்குமே அவசியமான ஒன்றாகும். கறையற்ற மற்றும் பிழையற்ற வாழ்வு வாழ, பாவத்தினைப் பற்றிய விழிப்புணர்வு அவசியமாகும். **2 பேதுரு 3:14** ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்.

எது சுத்தம் (பரிசுத்தம்), எது அசுத்தம் (பாவம்) என்பதனைப் பற்றிய விழிப்புணர்வு தேவை **(லேவி. 10:10, எசேக்கியேல் 22:26)**. ஏனெனில் இன்றைய நாட்களில் பாவம் என்பது, பாவமாக பார்க்கப்படுவது மிகவும் குறைந்து விட்டது. பாவத்தினை நியாயப்படுத்திய காலம் மாறி, பாவத்தினை, நியாயமாகவே பார்க்க ஆரம்பித்துவிட்டனர். 'இது உனக்கு நியாயம் (சரி), இது எனக்கு நியாயம் (சரி)' என பேச ஆரம்பித்துவிட்டனர். எந்த ஒரு தவறினையும் சரியாக செய்தால், அது தவறே இல்லை என்போரும் பெருகிவிட்டனர். 'பாவம் எப்போதும்


**வாசகர்களின் கவனத்திற்கு**

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

பாவமே' என்பதனை நாம் உணர்ந்து, உறுதியாக இருக்க வேண்டும்.

பாவம் என்பது நம்மையும் கர்த்தரையும் பிரிக்கும் இயல்புடையது. நாம் கர்த்தரிடம் நெருங்க தடையாக இருக்கும். நமக்கு உதவி செய்யவிடாதபடி கர்த்தரையும் தடுக்கும். **ஏசாயா 59:1,2** இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கைகுறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை; உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே, அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.

அது அதிக கேட்டினை (அழிவை) உண்டாக்கும் **(யோவான் 5:14)**, ஆத்தும மரணத்தினை உண்டாக்கும் **(எசேக்கியேல் 18:4)**, பாவ வாழ்வு தொடர்ந்தால் நம்மை நித்தியமாக கர்த்தரைவிட்டு பிரித்து, நரகத்தில் கொண்டு சேர்க்கும் இயல்புடையது **(வெளிப்படுத்துதல் 22:8)**. இதைப்போல, நமக்குள் பாவத்தினைப் பற்றி பைபிள் எச்சரிக்கின்ற விழிப்புணர்வு கர்த்தருக்கு உகந்த துக்கம் உண்டாக்குகின்றது.

## அறிந்து கொள்வோம்

# தரங்கம்பாடி - டேனிஷ் கோட்டை



தமிழ்நாட்டின் நாகப்பட்டிணம் மாவட்டத்தில் வங்கக் கடலோரம் தரங்கம்பாடி எனும் மீனவக் கிராமம் அமைந்துள்ளது. புறநானூறு, அகநானூறு போன்ற சங்க இலக்கியங்கள் இவ்வூரைப் பொறையாறு என்று குறிப்பிடுகிறது. அக்காலத்தில் இவ்வூர் துறைமுகமாக இருந்துள்ளது. இப்பகுதியை பெரியன்கிழான் என்பவர் ஆண்டுவந்ததாகச் சொல்லப்படுகிறது. இங்குள்ள முதலாம் குலசேகரபாண்டியனின் கி.பி.1305ஆம் ஆண்டு கல்வெட்டில், 'சடங்கன்பாடியான குலசேகரன் பட்டினத்து உடையார் மணிவண்ணீ சுரமுடையார்க்கு' என்றுள்ளது. அது போல, சடங்கன்பாடி என்ற பெயரே மருவி பின்னர் தரங்கம்பாடி என அழைக்கப் பட்டுள்ளது.

தரங்கம்பாடி என்றால் 'அலைகள் கவி பாடும் இடம்' என்பதாகும். பாரம்பரிய வணிகத் துறைமுக நகரமான தரங்கம்பாடியில், டென்மார்க் நாட்டினர் டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி என்ற பெயரில் வணிக நிறுவனம் ஒன்றை நிறுவுவதற்கு, அப்போது தஞ்சையை ஆண்டுவந்த ரகுநாத நாயக்கரை அணுகி, அவரின் ஆணைக்கிணங்க 1620ஆம் ஆண்டு டென்மார்க்கைச் சேர்ந்த கப்பல் தளபதி ஒவ்கிட்டே என்பவர் மன்னனுடன் குத்தகை அடிப்படையில் ஒப்பந்தமிட்டு டேன்ஸ்பர்க் என்ற இக்கோட்டையைக் கட்டினார்.

இக்கோட்டை 200 அடி நீளம் மற்றும் 36 அடி அகலம் என்ற அளவில் உருவாக்கப்பட்டுள்ளது. கோட்டையைச் சுற்றி அகழி எழுப்பப்பட்டு பாலங்களும் உருவாக்கப்பட்டன. மேலும் எதிரிகளைத் தாக்குவதற்காக பீரங்கிகளும் நிறுவப்பட்டன. இக்கோட்டை டேனிஷ் கட்டடக்கலைப் பாணியில் பெரிய அரங்குகள், உயர் கூரைகள், வளைவுகளுடன் கட்டப்பட்டுள்ளது. டேனிஷ்காரர்கள் வடிவமைத்த கட்டட வரைபடத்தைத் தமிழகக் கட்டுமானக் கலைஞர் களும், தொழிலாளிகளும் சேர்ந்து கட்டினர். இக்கோட்டையில் முன்பு தேவாலயமாகப் பயன்படுத்தப்பட்ட இடம் தற்போது அரசு அருங்காட்சியகமாக செயல்படுகின்றது. பத்தலோமயுஸ் சீகன்பால்க் மற்றும் கென்றிச் புளூட்டாச்சோ ஆகியோர் டென்மார்க் அரசரின் உத்தரவின் பேரில் கி.பி 1705ஆம் ஆண்டு மதப்பிரசாரத்துக்காகத் தமிழகத்துக்கு அனுப்பப் பட்டனர்.

இந்திய மொழியில் முதன்முதலாக விவிலியம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சுருவாக்கம் செய்து தரங்கம்பாடியில் சீகன்பால்க் தான் கி.பி. 1714ல் வெளியிட்டார். தரங்கம்பாடி கி.பி 1848ஆம் ஆண்டு ஆங்கிலேயர் வசம் வந்தது. அதன்பிறகு இந்த கோட்டை தன் பொலிவை இழந்தது.

**2.குற்றந்தீர எவ்வளவு நியாயஞ்சொல்லுதலையும் (பாவத்தினை ஒத்துக்கொண்டு, அறிக்கை செய்து விட்டுவிடுதல்):**

கர்த்தருக்கு உகந்த துக்கம் என்பது இரண்டாவதாக, ஒருவருக்குள் அவருடைய குற்றம் தீரும்படியான நியாயத்தினை உருவாக்குகின்றது. ஒருவருடைய குற்றம் (அநியாயம்) எப்போது தீர்ந்து, அவர் நியாயமாக மாறுவார்? அந்த நபர், தனது பாவத்தினை ஒத்துக்கொண்டு, அறிக்கையிட்டு, கர்த்தரிடம் மனப்பூர்வமாக திரும்பும்போது மாற்றம் உண்டாகும். **1 யோவான் 1:8,9** நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

பாவங்களை அறிக்கையிட்டு, அதனை விட்டுவிடுகின்றவருக்கே கர்த்தருடைய இரக்கம் கிடைக்கும் **[நீதி. 28:13]**. தாவீது தன் பாவத்தினை அறிக்கையிட்டு தேவனிடம் இரக்கம் பெற்று, (மன்னிப்பினைப் பெற்று) மாறியதை நாம் அறிவோம் **[சங். 51:1-4; 2 சாமுவேல் 12:1; 1 இராஜாக்கள் 15:5]**. மனிதருக்கு விரோதமாக செய்ததை, மனிதரிடமும் **[1 சாமுவேல் 24:16,17]**, கர்த்தருக்கு விரோதமாக செய்ததை, கர்த்தரிடமும் அறிக்கையிட வேண்டும் **[தானியேல் 9:20]**.

**3. எவ்வளவு வெறுப்பையும் (பாவத்தின் மீது வெறுப்பு):**

கர்த்தருக்கு உகந்த துக்கம் என்பது அடுத்ததாக, ஒருவருக்குள் பாவத்தின் மீது வெறுப்பை உண்டாக்குகின்றது. நமது இச்சையினாலே இழுக்கப்பட்டு செய்யப்பட்ட பாவத்தினை, நாம் முற்றிலுமாக வெறுப்போம். **2 கொரிந்தியர் 4:2** வெட்கமான அந்தரங்கக் காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்.

பாவத்தினை வெறுப்பது என்பது நமது இயல்பாக மாற வேண்டும். பாவத்தின் மீதுள்ள பற்றினை முழுவதும் அருவருப்பாக மாற்றிட வேண்டும். கர்த்தருக்கு பாவம் எப்படி அருவருப்பாக இருக்கின்றதோ? அவ்வாறு நமக்கும் அருவருப்பாக மாறிட வேண்டும் **[நீதி. 6:16-19]**.

**4. எவ்வளவு பயத்தையும் (கர்த்தர் மீது பயம்):**

கர்த்தருக்கு உகந்த துக்கம் என்பது, அடுத்ததாக நமக்குள் தேவபயத்தை உண்டாக்குகின்றது. தேவபயம் என்பது நம்மை பாவம் செய்யாதபடி தடைசெய்ய உதவுகின்றது **[யாத். 1:17-21]**. துணிகரமாக கர்த்தருடைய சமூகத்தில் நிற்க மாட்டோம் **[யாத். 3:6]**. கர்த்தருக்கு உகந்த துக்கம் அடையாததினால், யூதர்கள் தேவபயமற்று இருந்தனர். **மல்கியா 1:6** குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம்பண்ணுகிறார்களே; நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்; அதற்கு நீங்கள்: உமது நாமத்தை எதினாலே அசட்டைபண்ணினோம் என்கிறீர்கள்.

கர்த்தருக்குப் பயந்து வாழ்வதே பாக்கிய வாழ்வு **[சங்கீதம் 1:2,3]**. கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்பது தீமையை விட்டு விலகுவதாகும் **[நீதி. 3:7; 8:13]**.

**5. எவ்வளவு ஆவலையும்:**

கர்த்தருக்கு உகந்த துக்கம் என்பது, அடுத்ததாக பரிசுத்தமான காரியங்கள் மீது நமக்கு ஆர்வத்தை உண்டாக்குகிறது. சங்கீதம் 42:1,2 மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என்

ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?

சபைக்கூடுகை, வேதவாசிப்பு, ஜெபவேளை, நற்செய்தி அறிவித்தல் போன்ற காரியங்கள் நமக்கு மிகுந்த ஆர்வத்தை உண்டாக்கும்.

**6. எவ்வளவு பக்தி வைராக்கியத்தையும்:**

கர்த்தருக்கு உகந்த துக்கம் என்பது, அடுத்ததாக, நமக்கு பக்தி வைராக்கியத்தை உண்டாக்குகின்றது. பக்தி வைராக்கியம் என்பது பக்தியான (ஆவிக்குரிய) காரியங்களில் உறுதியாக இருப்பதினைக் குறிக்கிறதாக இருக்கலாம். அது நம்மை கர்த்தரிடம் நெருங்கி சேர உதவுகின்றது. **லூக்கா 5:1** பின்பு அவர் கெனேசரேத்துக் கடலருகே நின்றபோது, திரளான ஜனங்கள் தேவவசனத்தைக் கேட்கும்படி அவரிடத்தில் நெருங்கினார்கள்.

யாக்கோபைப்போல தூக்கத்தில் அவரிடம் கிட்டி சேர்வோம். வாழும்போது, அவருடன் நெருக்கமான வாழ்வு வாழ்ந்தால்தான், இது சாத்தியமாகும்.

பாடல் வரிகள் :

**யாக்கோபைப்போல், போகும் பாதையில்
பொழுது பட்டு, இராவில் இருள் வந்து மூடிட
தூக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து,
தூங்கினாலும் என் கனாவில்,
நோக்கியும்மை கிட்டிச் சேர்வேன்,
வாக்கடங்கா நல்ல நாதா!**

**7. எவ்வளவு கண்டிப்பையும்:**

கர்த்தருக்கு உகந்த துக்கம் என்பது, நமக்குள் இறுதியாக, கண்டிப்பை (கண்டிப்பான மனதை), அதாவது, உறுதியாக நிலைநிற்றலை உண்டாக்குகின்றது. **அப்போஸ்தலர் 2:41,42** அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

நாம் கர்த்தரில் நிலைத்திருக்க வேண்டும்; கர்த்தரில் நிலைத்திருப்பது என்பது, அவருடைய சபையில் நிலைத்திருப்பதாகும். சபையில் நிலைத்திருக்க நாம் சத்தியத்தில் நிலைத்திருக்க வேண்டும். சத்தியத்தில் நிலைநிற்க தெய்வீக குணங்களினால் நிலைத்திருக்க வேண்டும்.

இறுதியாக, பிரியமானவர்களே! கர்த்தருக்கு உகந்த துக்கம், கொரிந்து பரிசுத்தவான்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையையும், குற்றந்தீர எவ்வளவு நியாயஞ்சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்தி வைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கியதைப்போல, நமக்குள்ளும் உண்டாக்க அனுமதிப்போம். கர்த்தரை துக்கப்படுத்திய அவர்கள் எப்படி அவருக்கு மகிழ்ச்சியை உண்டாக்கினார்களோ, அதைப்போல கர்த்தருக்கு மகிழ்ச்சியை உண்டாக்குவோம். கர்த்தர் நம்மைப் பெலப்படுத்தி, வழிநடத்துவாராக! ஆமென்.

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. யெப்தா, யுத்தத்தில் தான் வெற்றி பெற்றால், எப்படிப்பட்ட பலியிடுவேன் என்று தேவனிடம் பொருத்தனை செய்தார்?
2. நெகேமியா என்றால் என்ன பொருள்?
3. நெகேமியாவுக்கும், அவனோடிருந்தவர்களுக்கும் இடறலாய் இருந்தவர்கள் யார்?
4. ஆகாப் ராஜா எதின்மீது ஆசை கொண்டான்?
5. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் எதில் உறுதியாயிருந்தார்கள்?

# அழைப்பு - அழைப்பை ஏற்றுக்கொள்ளுங்கள்!

கிறிஸ்துவுக்குள் பிரியமான பெண்கள் யாவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

வேதாகமத்தில் தேவசித்தம் நிறைவேற, தேவதிட்டம் செயல்பட, தேவ வார்த்தைகளை பிறருக்கு எடுத்துச் சொல்ல என்று அநேக பெண்கள் செயல்பட்டதை நாம் காண்கிறோம், வாசிக்கிறோம்.

இயேசுவோடு, இந்த பூமியில் அவர் வாழ்ந்த நாட்களின்போது, ஊழிய பிரயாணத்தில் பெண்கள் பங்களித்தனர் என்று நமக்கு தெரியும். அதினால் தான் அவர்கள் வேதத்தில் பாராட்டப் பட்டுள்ளார்கள். ஆம், பிரியமானவர்களே! அவர்கள் எல்லோரும் தேவன் தன்னை எதற்காக அழைத்தாரோ, படைத்தாரோ அந்த நோக்கத்தை நிறைவேற்ற தங்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்கள். அவர்களில் சிலரைக் குறித்து நாம் பார்ப்போம்.

**மரியாள்:** இவள் நாசரேத்தை சேர்ந்தவள்; சரியான வம்சாவளியில் வந்தவர் மரியாள் என்பதால் கடவுள் அவரை இயேசுவின் தாயாகும்படி தேர்ந்தெடுத்தார். மத். 1:1-ல் வரலாற்று பகுதியை படிக்கும்போது நமக்கு அது நன்கு புரியும். நிச்சயிக்கப்பட்டிருந்த நேரத்தில் தேவனுடைய திட்டம் தன்னிடத்தில் ஒப்புக்கொடுத்த போதும்கூட அந்த அழைப்பை அவள் ஏற்றுக் கொண்டு, அதற்கு பாத்திரமாக நடந்துகொண்டார். (லூக்கா 1:26-49).

**பிரிஸ்கில்லாள்:** இந்த பெண் தன்னுடைய கணவர் ஆக்கில்லாவுடனும், அப்போஸ்தலனாகிய பவுலுடனும் இணைந்து தேவஊழியத்தை செய்து வந்தாள். கூடாரம் செய்தல் மற்றும் வேதத்தில் தேறின பெண் இவள் (அப். 18:18,19; ரோமர் 16:3,4). தேவன் தன்னை அழைத்ததை ஏற்றுக் கொண்ட பெண். தன் உயிரையும் அவருடைய பணிக்காக கொடுக்க முன்வந்தாள். (1கொரி. 16:9).

**லீதியாள்:** யூத மார்க்கத்தை சேர்ந்த பெண்ணாக இருக்கலாம். தேவ பக்தியுள்ள பெண்ணாக அவள் இருந்ததினால், தேவன் அவளைத் தெரிந்துகொண்டார் (சங். 4:3). எனவே, பவுல் மூலமாக அவளும், அவளுடன் இருந்த குடும்பத்தாரும் வசனத்தை ஏற்றுக் கொண்டார்கள்

## அறிந்து கொள்வோம்

### மாதம் ஒரு "பூ" கனகாம்பரம்



தென்னிந்தியா மற்றும் இலங்கையை தாயகமாகக் கொண்ட அகாந்தேசியே குடும்பத்தில் உள்ள ஒரு வகை பூக்கும் தாவரமாகும். இவை குறுஞ்செடி வகையைச் சார்ந்தது. இதை வீடுகளில் அழகுக்காகவும், வணிகத்திற்காகவும் வளர்க்கிறார்கள். இம்மலர் தென்னிந்தியா, இலங்கை மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் காணப்படுகிறது. இதன் சிறப்பம்சமாக, அதன் மலர்கள் காவி, இளஞ்சிவப்பு, மஞ்சள் போன்று கண்ணைக்கவரும் வண்ணங்களில் காட்சித் தருவதேயாகும்.

குளிர் காலத்தில் வாடியும் வதங்கியும் காணப்படுகின்ற வெப்பச் சூழ்நிலைக்கு ஏற்றத் தாவரமாகும். இதை தொட்டிகளில் வளர்க்கும் பழக்கமும் காணப்படுகிறது. இதன் மலர் 3-4 சமச்சீரற்ற இதழ்களைக் கொண்டுக் காணப்படுகிறது. இவைப் புதர்போல் மண்டி கொத்துக்கொத்தாய் பூத்துக் குலுங்கும் தன்மை உடையது.

(அப். 16:15). தேவ பிள்ளைகள் அவள் வீட்டில் தங்கும் பாக்கியம் அவளுக்குக் கிடைத்தது.

**யொகேபேத்:** யாத். 2:2,9, தேவ திட்டம் நிறைவேற தன் பிள்ளைகளை தேவபிள்ளைகளின் நலனுக்காக அர்ப்பணித்தவள். (மோசே, ஆரோன், மிரியாம்) மூவரும் தேவசித்தம் நிறைவேற வாழ்ந்தவர்கள். இந்த தாயின் வாழ்வில் தேவ அழைப்பை அப்படியே நிறைவேற்றினவள். மிகவும் தைரியமானவள்; தேவன் தன் பிள்ளைகளை பார்த்துக்கொள்வார் என்று நம்பிக்கையுடன் இருந்தவள்.

**ரூத்:** தன் பின்னணியை மீறி, நீதியான பாதையைத் தேர்ந்தெடுத்தவள். அதற்காக தன்னை ஆயத்தம் செய்து கொண்டவள் (ரூத் 1:1-4; 4:10); தீர்க்கமான முடிவு எடுக்கும் பொறுப்பான, அன்பான பெண். (தாவீது ராஜாவின் பெரிய பாட்டி நகோமியின் மருமகள்) (ரூத் 2:11; 1:15-17; 2:2-7). தன் இளமையும், அழகையும் சரியாக பயன்படுத்தினவள்; குணசாலியான பெண் இந்த ரூத். தேவ அழைப்பையும், நோக்கத்தையும் சரியாக புரிந்துக் கொண்டாள்.

ஆம், பிரியமானவர்களே! வேதத்தில் நாம் இப்பொழுது தெரிந்துகொண்ட இந்த பெண்களை போல, தேவன் நம்மையும் இந்நாட்களில் வசனத்தின் மூலம் அவர் திட்டம் நிறைவேற உலகத்திலிருந்து பிரித்தெடுத்துள்ளார் (1 பேதுரு 1:18-20). அவருடைய பிள்ளைகளாக நம்மை மாற்றியுள்ளார் (1 பேதுரு 2:9). இன்று நம்மேல் விழுந்த கடமை, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிறருக்கு சொல்வதே ஆகும் (மத். 28:18-20). பிறருக்கு நன்மை செய்வதுமே நம் கிறிஸ்தவ கடமை.

தேவனுடைய அழைப்பை புரிந்துக்கொண்டு, விலைமதிப்பற்ற அந்த அழைப்பை ஏற்றுக் கொள்வோம்! அழைப்பிற்கு பாத்திரவான்களாக நடந்து கொள்வோம்! (மத். 22:14).

– சகோதரி. **பெவர்லி லிடியா**

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil:** **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam in Tamil:** **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am

**Heaven TV:** Thursday, Friday, Saturday, 6:30-7:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program:** **Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**

Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**

Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

வாலிபர் பகுதி

# யோசேப்பின் வீடு (குடும்பம்)

அன்பான வாலிப தம்பி தங்கைகளுக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன், இந்த மாதம் யோசேப்பின் குடும்பத்தைப் பற்றி படிக்க ஆயத்தப்படுவோம்.

யோசேப்பு யாக்கோபின் 11-வது மகன். மிகவும் பாசமாக வளர்க்கப்பட்ட மகன். அதினாலேயே மற்ற சகோதரர்கள் எல்லாராலும் வெறுக்கப்பட்டவன். இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒருநாள் யாக்கோபு யோசேப்பை அழைத்து, உன் சகோதரர்களிடம் சென்று அவர்களை நலம் விசாரித்து வா! என அனுப்பினான். யோசேப்பும் அப்படியே கேட்டு, தன் சகோதரர்களை சந்திக்க செல்கிறான். ஆனால் அவன் சகோதரர்களோ, அவன் மீதான பொறாமை மற்றும் வெறுப்பின் நிமித்தம், தூரத்திலே அவனை அடையாளம் கண்டு, அவனை கொலை செய்யும்படி யோசனைப்பண்ணுகின்றனர். பின்னர் அவனை எகிப்திற்கு அடிமையாக விற்றும் போட்டனர்.

யோசேப்புக்கு சூழ்நிலைகள் எவ்வளவு மோசமாக இருந்தாலும், அவற்றை சரியான முறையில் ஏற்றுக் கொள்ளும் மனமும், பக்குவமும் இருந்தது. ஏனென்றால், **யோசேப்பு கர்த்தரோடிருக்கிறவனாக தன்னை ஆயத்தம் செய்திருந்தான்.**

தான் அடிமையாயிருந்த எகிப்திலேயே யோசேப்பு, மிகப்பெரிய பொறுப்புகளையும், பதவிகளையும் கர்த்தருடைய கிருபையினாலே பெற்றான். எகிப்தின் ராஜாவுக்கடுத்த மிகப்பெரிய பதவியையும் அடைந்தான். யோசேப்பு ஆஸ்நாத் என்கின்ற ஓன் பட்டணத்தை சேர்ந்த பெண்ணை திருமணம் செய்தான். யோசேப்பின் வீடு, அதாவது குடும்பம் எப்படியிருந்தது என்பதைப் பார்ப்போம்.

## மன்னிக்கும் வீடு:

எகிப்தின் அதிகாரியாக வளர்ந்த பிறகு, யோசேப்பு பொருளாதார வசதியில் உச்சத்தில் இருந்தான். இந்த வேளையில், தான் பிறந்து வளர்ந்த தேசத்தில் கொடிய பஞ்சம் என்ற தகவலை தன் அண்ணன்கள் மூலமாக தெரிய வர, தனக்கு அவர்களால் நேர்ந்த துயரத்தையும், கஷ்டத்தையும் நினைத்து, தன் அண்ணன்களைப் பழிவாங்க இதுதான் சரியான தருணம் என யோசேப்பு நினைக்காமல், அவர்களுக்கு பஞ்சத்திலிருந்து தப்பிக்கொள்ள உணவையும், அவர்களைக் குடும்பமாக தான் வாழ்கின்ற ஊராகிய எகிப்திற்கு வரவழைத்து, அவர்களுக்கு இடமளித்து, அவர்கள் தனக்கு செய்த எல்லாவற்றையும் யோசேப்பு மன்னிக்கின்றான். பாருங்கள், மன்னிப்பதில் சிறந்து விளங்குகின்றான்.

## மெய்யான கடவுளை அறிந்து கொண்ட வீடு:

யோசேப்பின் மனைவி ஆஸ்நாத் ஒரு புறதெய்வ நம்பிக்கையுள்ளவளாக இருந்தாள். யோசேப்பு வழிபடும் கடவுளை அறிய அவளுக்கு அநேக வாய்ப்புகள் கிடைத்தது. அதனை சரியாக புரிந்துகொண்டு, மெய்யான கடவுளை அறிந்து கொண்டாள். யோசேப்பு தான் மட்டும் மெய் கடவுளாகிய பைபிள் கடவுளை நம்பவில்லை. புறவழிபாடு செய்த தன் மனைவியையும், பின்னர் இருவருக்கும் பிறந்த குழந்தைகளுக்கும் பரலோக கடவுளின் மேன்மையை சொல்லிக் கொடுத்து, கர்த்தருடைய வழிகளில் முழுக் குடும்பத்தையும் நடத்தினார். அநேக கிறிஸ்தவ குடும்பங்களில்கூட நடக்காததை யோசேப்பின் வீட்டில் பார்க்க முடிகின்றது.

எனவே, யோசேப்பின் வீட்டைப்போல நாமும் நமது குடும்பமும் மன்னிக்கும் வீடாகவும், மெய்யான கடவுளை அறிந்துகொள்ளும் வீடாகவும் நடந்துகொள்ள பிரயாசப்படுவோம்.

– உங்கள் அண்ணன் **JP**

## சிறுவர் பகுதி

# யெப்தாவின் மதியற்ற துணிச்சலான பொருத்தனை

ஹாய் செல்லக் குட்டிங்களா!

இந்த மாதம் யெப்தாவின் மதியற்ற துணிச்சலான பொருத்தனையைப் பற்றி படிக்கலாமா? (நியாயாதிபதிகள் 11:13).

இஸ்ரயேலின் 9ஆம் நியாயாதிபதி யெப்தா. இவன் ஒரு கிலேயாத்தியன். இவன் தன் சகோதரரால் துரத்தப் பட்டபோது தோப் என்னும் நாட்டுக்குப் போய், அங்கே ஒரு பராக்கிரமசாலி என்ற பேர் பெற்றான். அம்மோனியர் கிலேயாத்தியர் மேல் படையெடுத்து வந்தபோது கிலேயாத்தியர் யெப்தாவை அழைத்தார்கள். இவன் போய் அவர்களிடம் ஒரு ஆணைக்கேட்டுக் கொண்டு, அம்மோனியரோடு யுத்தம் செய்து, அவர்களை தோற்கடித்தான்.

யுத்தத்துக்குப் போகும் முன்பு இவன் ஒரு பொருத்தனையை கர்த்தரிடம் செய்து கொண்டான். அதென்னவெனில், தேவரீர் அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்புக்கொடுக்கவே ஒப்புக்கொடுத்தால், நான் அம்மோன் புத்திரரிடத்திலிருந்து சமாதானத்தோடே திரும்பி வரும்போது, என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது



கர்த்தருக்கு உரியதாகும். அதைச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன் என்று பொருத்தனைப் பண்ணினார் யெப்தா. அதேபோல் கர்த்தர் அவனோடிருந்து, அம்மோனியாரின் படையைத் தோற்கடிக்க செய்தார்.

யெப்தா போரில் வெற்றி பெற்றுக்கொண்டு வீடு திரும்பும்போது, அவனுக்கு எதிராக வந்தது அவனுடைய மகள். அன்போடும், பாசத்தோடும் வளர்த்த மகள். அவனுக்கு இருந்தது அந்த ஒரே பிள்ளை மட்டும்தான். தன் தகப்பன் போரில் வெற்றிப் பெற்று வருவதை, ஆசையோடு பார்க்க அவள் தன் தகப்பனுக்கு எதிர்கொண்டு போனாள்.

சிறுபிள்ளைகளே!

யெப்தா செய்த மதியற்ற துணிச்சலான பொருத்தனையின், விளைவு என்னவென்று புரிகிறதா? நான் (யெப்தா) போரில் வெற்றி பெற்றால், எதிராக வருவதை பொருத்தனையாக பலியிடுகிறேன் என்று சொன்னான். கடைசியில் தன் மகளே எதிர்கொண்டு வருவாளென்று யெப்தா நினைக்கவில்லை.

கர்த்தருடைய பிள்ளைகளே!

கர்த்தருக்காக பொருத்தனை பண்ணிக்கொள்வது என்பது தவறல்ல. அது கர்த்தருக்குப் பிரியமான ஒன்று. நீங்களும் உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் கர்த்தருக்கு பிரியமான பொருத்தனை பண்ணிக் கொள்ளுங்கள். ஆனால், யெப்தாவைப் போல, ஞானமில்லாத ஒரு செயலைச் செய்யாதீர்கள். நீங்கள் ஞானமுள்ள பிள்ளைகளாக நடந்து கொள்ளுங்கள். எதையும் ஜாக்கிரதையாக தேர்வு செய்யுங்கள். கர்த்தர் உங்களோடு இருப்பாராக. ஆமென்.

**மனப்பாட வசனம் : நீதிமொழிகள் 19:20** "உன் அந்தியகாலத்திலே நீ ஞானமுள்ளவனாயிருக்கும்படி ஆலோசனையைக் கேட்டு, புத்திமதியை ஏற்றுக்கொள்".

— சகோ. பீட்டர்

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | A. ஹானா ஜோதிராணி | – | மதுரை |
| 2. | M. ஜோனத்தான் | – | கரூர் |
| 3. | J. நவீன் பீட்டர் | – | மதுரை |
| 4. | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | – | மதுரை |
| 5. | S. ஜூடா லியோ | – | ரஸ்தா |
| 6. | G. ஜெர்லின் | – | ரஸ்தா |
| 7. | M. அபி சூர்யா | – | எழுகம்வலசு |
| 8. | P. பாண்டியன் | – | வேலூர் |
| 9. | M. சஞ்சய் | – | மதுரை |
| 10. | V. ஏஞ்சல் ஜோயன்னா | – | மதுரை |
| 11. | A. அரவிந்த் | – | மதுரை |
| 12. | P.M.K. சனா | – | மதுரை |
| 13. | D. டேஃனி | – | சென்னை |
| 14. | D. ஜூனித்தா | – | சென்னை |
| 15. | A. சுபிக்ஷா | – | பெருமாள் வலசு |
| 16. | A. சாம்குமார் | – | பெருமாள் வலசு |

சிறுவர் பகுதி

# நெகேமியா



கிறிஸ்துவுக்குள் அன்பான குழந்தைகளா? எல்லாரும் எப்படி இருக்கீங்க? இந்த மாதம் நாம் அனைவரும் சேர்ந்து ஜெபத்தில் விடாப்பிடியாக இருந்த நெகேமியாவை பற்றி படிக்க இருக்கிறோம்.

நெகேமியா என்றால் **தேவனே எனக்கு ஆறுதல்** என்று பொருள்.

இவர் பாரசீகத் தலைநகரான சூசாவில் மன்னர் அர்த்தசஷ்டாவுக்குப் பானப் பாத்திரக்காரராக இருந்தார் (திராட்சரசம் ஊற்றிக்கொடுப்பது). அப்பொழுது தனது மக்களும், பாழடைந்து கிடந்த எருசலேம் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறதை கேள்விப்பட்டு, மிகவும் வருத்தப்பட்டார்.

தேவனின் உதவியின்றித் தம்மால் ஒன்றும் செய்ய இயலாது என்பதை நெகேமியா உணர்ந்திருந்தார். எனவே, அவர் பலமுறை தேவனிடத்தில் ஜெபத்தில் தெரிவித்து, உபவாசித்து, அழுது, தேவன் நிச்சயமாக இதிலிருந்து விடுவிப்பார் என்ற விசுவாசத்துடன் இருந்தார். இப்படியிருக்க, தேவன் ராஜாவின் இருதயத்தில் பேசி, நெகேமியாவுக்கு எருசலேம் அலங்கம் கட்டப்படுவதற்கு தேவையான எல்லாவற்றையும் அர்த்தசஷ்டா ராஜா கொடுத்து அனுப்பினார்.

இப்படியிருக்க, நெகேமியா எருசலேம் அலங்கத்தை கட்டுகிற செய்தியை கேள்விப்பட்ட சன்பல்லாத், தொபியா என்னும் இருவர் அவனுக்கு மனநோவாயிருந்தார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? குட்டீஸ்! அந்த அற்பமான யூதர் செய்கிறது என்ன, அவர்களுக்கு இடங்கொடுக்கப்படுமோ, பலியிடுவார்களோ, ஒரு நாளிலே முடித்துப்போடுவார்களோ, சுட்டெரித்துப் போடப்பட்டு மண்மேடுகளான கற்களுக்கு உயிர் கொடுப்பார்களோ என்று தன் சகோதரருக்கு சொன்னதுமன்றி, அவர்கள் கட்டினாலும் என்ன, ஒரு நரி ஏறிப்போனால் அவர்களுடைய கல் மதில் இடிந்துபோகும் என்றார். மேலும், மேலும் பல அவிசுவாசமான வார்த்தைகளையெல்லாம் நெகேமியாவுக்கும், அவனோடிருந்து தோள் கொடுத்த எல்லாருக்கும் இவர்கள் இருவரும் அவிசுவாசமான, பெலவீனப்படுத்துகிறவர்களாய் இருந்தார்கள்.

ஆனாலும் தேவன்மேலுள்ள விசுவாசத்தையும், நம்பிக்கையும், உறுதியையும் நேகேமியா விடவில்லை. அவனும், அவனோடிருந்தவர்களும் தாங்கள் எடுத்த முடிவில் உறுதியாயிருந்து, தேவன் தங்களுக்கு கொடுத்த பணியைச் செய்து முடித்தார்கள்.

அன்பான தேவனுக்குப்பிரியான பிள்ளைகளே! வாழ்வில் சில தேவைகள் வரும்போதும், துன்பங்கள் வரும்போதும் கடவுளை மட்டுமே நம்பியிருந்து, அவர் தரும்வரை பொறுமையோடிருந்து, நெகேமியாவைப்போல தேவனிடத்தில் உறுதியாய் ஜெபத்தில் தரித்திருந்து, பெற்றுக்கொள்ள பிரயாசப்படுவோம். நிச்சயம் தேவன் உங்கள் தேவைகளையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சந்திப்பார். சன்பல்லாத், தொபியா போல நாம் யாருக்கும் இடஞ்சலாக, அவிசுவாசமான வார்த்தைகளை பேசக்கூடாது. நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று தான் பைபிளை வாசித்து, ஜெபம்பண்ணி தேவனை மட்டும் சார்ந்திருப்பது ஆகும். நீங்களும் அப்படியிருக்க முடிவெடுப்பீர்களா குட்டீஸ்! அடுத்த மாதம் சந்திப்போம்...

**மனப்பாட வசனம் : சங்கீதம் 73:28** “எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்...”

– சகோ. ஜான் செல்லையா

சிறுவர் பகுதி

# மனந்திரும்பிய ஆகாப் ராஜா



கிறிஸ்துவுக்குள் அன்பான குழந்தைங்களா!! எல்லாரும் எப்படி இருக்கீங்க?. கர்த்தருடைய வார்த்தையை வாசிப்பதற்காக வந்த அனைத்து சிறு பிள்ளைகளுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள்!!

அருமையான செல்லங்களா!! இந்த மாதம் நாம் அனைவரும் சேர்ந்து ஆகாப் என்ற ஒரு ராஜாவைப் பற்றி படிக்க இருக்கிறோம். படிக்கலாமா? வாங்க படிக்கலாம்.

எலியா தீர்க்க தரிசியின் காலத்தில் வாழ்ந்தவர்தான் இந்த ஆகாப். இவர் வடக்கு இராஜ்ஜியமான இஸ்ரயேலின் ராஜாவாக இருந்தவர். இவர் சீதோனின் இளவரசியாகிய யேசபேலை திருமணம் செய்தான். இதற்கு முன் இருந்த ராஜாக்களைப் பார்க்கிலும் ஆகாப் ராஜா மிகவும் மோசமான ராஜா என்பதை வேதம் (பைபிள்) நமக்கு சொல்லுகிறது. அதாவது நமது கர்த்தருக்கு விரோதமாக பாகால் என்ற கற்பனையான கடவுளின் பெயரைச் சொல்லி, சிலை வழிபாடு செய்து பாவம் செய்து வந்தான். உண்மையுள்ள மற்றும் நம்மை உண்டாக்கின கர்த்தர் ஒருவர் இருக்கும்பொழுது, கைகளினால் செதுக்கப்பட்ட சிலையை தெய்வமாக வணங்கினான். மேலும் அதற்கு பலி செலுத்துவதற்கென பலிபீடத்தையும் கட்டினான்.

ஆகாப் ராஜாவின் அரண்மனையின் அருகில் ஒரு திராட்சைத் தோட்டம் இருந்தது. அந்த திராட்சைத் தோட்டம் நாபோத் என்பவனுடையது ஆகும். அந்த திராட்சைத் தோட்டத்தை வாங்கவேண்டும் என்று ஆகாப் ராஜா ஆசைப்பட்டான். ஆனால் நாபோத் அந்த தோட்டத்தை தர மறுத்துவிட்டான். அதனால் ஆகாப் ராஜா மிகவும் கோபமும் வருத்தமும் அடைந்து தன் வீட்டிற்கு வந்து, சாப்பிடாமல் தன் கட்டிலின்மேல் படுத்து தன் முகத்தை திருப்பிக்கொண்டான்.

அப்பொழுது அவன் மனைவியாகிய யேசபேல் அவனிடத்தில் வந்து நீங்கள் சாப்பிடமால் இருப்பது என்ன? என்று விசாரித்தால், ஆகாப் ராஜா நடந்ததைக் கூறினான். அப்பொழுது யேசபேல் அவனிடத்தில் நீர் ஒரு ராஜா நீங்கள் கவலைப் படாமல் சாப்பிடுங்கள். நான் உங்களுக்கு அந்தத் திராட்சைத் தோட்டத்தை வாங்கித் தருவேன் என்று சொன்னாள்.

யேசபேல் நாபோத்தின்மேல் பொய் வழக்குப்போட்டு அவனை கொலை செய்தாள். பின்பு ஆகாப் ராஜா அந்த திராட்சைத் தோட்டத்தை அபகரித்துக் கொள்ளும்படி எழுந்துபோனான். அப்பொழுது கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியா அவனிடம் வந்து நீ தீமையான காரியங்களை செய்தபடியால் கர்த்தர் உன்னையும் உன் சந்ததியையும் அழித்துப் போடுவார் என்று சொன்னார். அதைக் கேட்ட ஆகாப் ராஜா தன்னுடைய ஆடைகளை கிழித்து இரட்டை உடுத்திக்கொண்டு, உபவாசம் (விரதம்) இருந்து மிகவும் தாழ்மையாக நடந்துகொண்டான். அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எலியாவிற்கு உண்டாகி, ஆகாப் தன்னைத் தாழ்த்தினதை பார்த்தாயா? என்று சொல்லி, அவன் தன்னைத் தாழ்த்தினபடியால் அவனுக்கு செய்வேன் என்று சொல்லியிருந்த தீமையை அவனுடைய அடுத்த சந்ததிக்கு செய்வேன் என்று அவனை மன்னித்தார்.

எனக்கு பிரியமான செல்லங்களா!! ஆகாப் ராஜா கர்த்தருக்கு விரோதமான பாவங்கள் பல செய்திருந்தாலும், கர்த்தருடைய தீர்க்கதரிசி சொன்ன வார்த்தையை உடனே விசுவாசித்து உபவாசம் இருந்து தன்னைத் தாழ்த்தினான். நாம் ஆகாப் ராஜாவைப் போல ஆபத்து வரும்பொழுது மட்டும் கர்த்தரைத் தேடாமல் அனுதினமும் கர்த்தரின் முன்பாக தாழ்மையோடும். அவருக்கு பிரியமாகவும் நடந்துகொண்டால், கர்த்தர் நமக்கும் நம்முடைய அடுத்த சந்ததிக்கும் நன்மையான ஈவுகளை தந்தருளுவார்.

**மனப்பாட வசனம் : சங்கீதம் 36:7** "தேவனே உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது! அதினால் மனுபுத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள்"

– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்

சிறுவர் பகுதி

# சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ



கடவுளுக்கு பிரியமான செல்லங்களா! நீங்கள் எல்லாரும் எப்படியிருக் கிறீர்கள்?

இப்பகூட மூன்று அண்ணனை பற்றி கற்றுக்கொள்ள போகிறோம். இவர்கள் தானியேலின் நண்பர். இவர்களை சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்று அழைத்தார்கள். இவர்கள் பாபிலோனியர்கள்.

பாபிலோனிய இராஜா ஒரு பெரிய சிலையை நிறுத்தி, அச்சிலையை எல்லாரும் வணங்க வேண்டும் என்று கட்டளையிட்டார். இதை வணங்கவில்லை என்றால் என்ன தண்டனைத் தெரியுமா? எரியும் நெருப்பு சூளைக்குள் தூக்கி போடப்படுவார்கள் என்றார்.

எல்லாரும் பயந்து இராஜாவுக்கு கீழ்படிந்து வணங்கினார்கள். ஆனால் இந்த சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் இராஜா நிறுத்தி வைத்த சிலையை வணங்கவில்லை, இராஜாவிடம் நாங்கள் வணங்கமாட்டோம் என்றார்கள்.

இதை கேள்விபட்டதும் நேபுகாத்நேச்சாருக்கு மிகுந்த கோபம் வந்துச்சு. அவர்களை அழைத்துகொண்டு வரும்படி தன் சேவகர்களுக்கு கட்டளையிட்டான். அவர்களை அழைத்துக்கொண்டு வந்தார்கள், இராஜா இந்த சிலையை வணங்கும்படி மீண்டும் அவர்களுக்கு கட்டளையிட்டார். இல்லையென்றால் நெருப்புக்குள் தூக்கிபோட்டுவிடுவோம் என்றார். எங்களை நெருப்புக்குள் தூக்கிபோட்டால், எங்கள் தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராக இருக்கிறார். தப்புவிக்காவிட்டாலும் நாங்கள் நீங்கள் நிறுத்தின சிலையை வணங்கமாட்டோம் என்றார்கள். இராஜாவுக்கு கோபம் அதிகமாகிவிட்டது. சாதாரணமான நெருப்பு சூளையைச் சூடாக்குவதைப் பார்க்கிலும். ஏழு மடங்கு அதிகமாக சூடாக்கும் படிக்கும், அவர்களை நெருப்புக்குள் தூக்கிப் போடும்படி சேவர்களிடம் இராஜா கட்டளையிட்டார். சேவகர்கள் அவர்களை தூக்கிப்போட்டார்கள்.

என்ன நடந்தது தெரியுமா? சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூன்றுபேரை நெருப்பு சூளைக்குள் தூக்கிபோட்டார்கள். சிறிது நேரம் கழித்து இராஜா வந்து பார்க்கும்போது அதற்குள் நான்குபேர் இருக்கிறார்கள். இராஜா அவர்களை நெருப்பிலிருந்து வெளியே எடுக்கச் சொன்னார், வெளியில் வந்தவர்களை பார்த்தால், நெருப்பு எதுவுமே செய்யவில்லை. அவர்கள் முடிக்கூட கருகவில்லை, கடவுள் அவர்களைக் காப்பாற்றினார்.

கடவுளுடைய செல்லங்களா! இந்த மூன்று பேரும் உண்மையுள்ள கடவுளுக்கு உண்மையுள்ள வர்களாக இருந்தபடியினால், கடவுள் அவர்களுக்கு ஒரு சேதமுமின்றி காப்பாற்றினார்.

நீங்களும் சர்ச்சுக்குபோவதில், சர்ச்சில் சுத்தம் செய்வது, பாட்டு புக்கு எடுத்து வைப்பது, ஊழியருக்கு உதவுவது இப்படி உண்மையாக இருப்பீர்களா? படிக்கிறதில், ஜெபிக்கிறதில் உண்மையாயிருப் பீர்களா? உண்மையுள்ள கடவுளுக்கு உண்மை யாயிருந்தால் அவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : யாத்திராகமம் 20:3**
''என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.''

– சகோ. அன்பு ஏசுதாஸ்

## நவம்பர் மாத கேள்விகள்

(யோவான் புத்தகத்தில் இருந்து)

1. 'நான் சிறுக வேண்டும்' என்று கூறியவன் யார்?
2. 'தாகத்துக்கு தா' யார் யாரிடம் கேட்டது?
3. இரட்சிப்பு யார் வழியாய் வருகிறது?
4. மரித்தோர் யாருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்?
5. எதை ஆராய்ந்து பார்க்கும்படி இயேசு கூறினார்?
6. தேவனுக்கேற்ற கிரியை எது?
7. உயிர்ப்பிக்கிறது எது?
8. இயேசுவின் நாளைக்காண ஆசையாயிருந்து கண்டு களிகூர்ந்தவன் யார்?
9. மனுஷ கொலைபாதகனும், பொய்யனும், பொய்க்குப் பிதாவும் யார்?
10. யார் உண்டாவதற்கு முன்னமே இயேசு இருந்தார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-12-2024**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. யோவான் 1:1 | 6. யோவான் 3:5 |
| 2. யோவான் 1:6 | 7. யோவான் 3:14 |
| 3. யோவான் 1:46 | 8. யோவான் 3:16 |
| 4. யோவான் 1:47 | 9. யோவான் 3:17 |
| 5. யோவான் 2:2 | 10. யோவான் 3:23 |

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1) | Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் | நெல்லை |
| 2) | Mrs. பட்ரிசியா டேவிட் | சேலம் |
| 3) | P. ரேச்சல் ஜானிமா | மதுரை |
| 4) | Mrs. அன்னத்தாய் ஆல்பர்ட் | தூத்துக்குடி |
| 5) | J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் | மதுரை |
| 6) | J.V. சுந்தரபாய் வில்லியம் | சேலம் |
| 7) | S. ஷீபா ஞானவின்சா | டோனாவூர் |
| 8) | D. சந்திரன் மோசஸ் | பெங்களூர் |
| 9) | N. ஜான் செல்லையா | மதுரை |
| 10) | Mrs. J. ஜெயராணி ஜான் | மதுரை |
| 11) | S. கார்த்திக் | கரூர் |
| 12) | Mrs. தேவி ராஜாசிங் | தூத்துக்குடி |
| 13) | S.S. ஞானவின்சா ஸ்பர்ஜன் | டோனாவூர் |
| 14) | Mrs. ஹெப்ஸி தாமஸ் | படப்பை |
| 15) | Mrs. பியூலா ஜேசுராஜன் | புதுவை |
| 16) | Mrs. சாந்தி ஜோயல் | திருச்சி |
| 17) | P.S.ருக்மணி | கோபி |
| 18) | Mrs.C. வள்ளி | கரூர் |
| 19) | Mrs. இந்திரா பாண்டி | மதுரை |
| 20) | Mrs. ரெக்ஸிலின் டெல்பினா | தூத்துக்குடி |
| 21) | Mrs. மேரி ராஜ் | மதுரை |
| 22) | Mrs. ஹெலன் திலக் | தூத்துக்குடி |
| 23) | Mrs. தெல்மா ஸ்டான்லி | மதுரை |
| 24) | A. கார்பஸ் பிலேமோன் | மதுரை |
| 25) | C. வைலட் கிறிஸ்டோபர் | தளவாய்புரம் |
| 26) | J. ஜான்சி | ஆனைமலை |
| 27) | A. ரோஸ்மேரி | சென்னை |
| 28) | Mrs. பெரில் பாஸ்கர் | படப்பை |
| 29) | Mrs.சாந்தி வில்லியம் | புதுக்கோட்டை |
| 30) | Mrs.D. குளோரி திலகவதி | சென்னை |
| 31) | Mrs. சூரிய பிரியா | மதுரை |
| 32) | G.பார்த்திபன் | வேலூர் |
| 33) | Mrs. மரியா செல்வராஜ் | மூலனூர் |
| 34) | Mrs. மீனாள் | மூலனூர் |
| 35) | Mrs. குப்பத்தம்மா | மூலனூர் |
| 36) | M.S. ஜேம்ஸ் | திண்டுக்கல் |
| 37) | Mrs.R. சரோஜா | தென்கலம் |
| 38) | A. லலிதா | புதுக்கோட்டை |
| 39) | A. டேவிட் ஜெயசந்திரன் | மதுரை |
| 40) | Mrs. ராணி குமரன் | கரூர் |
| 41) | S. பாக்கியராஜம் | மதுரை |
| 42) | Mrs.P. உமாராணி | சித்தோடு |
| 43) | Mrs. பியூலா ஜேசுராஜன் | புதுவை |
| 44) | R. ஞானசிரோன்மணி | மதுரை |
| 45) | Mrs. குளோரி பால்ராஜ் | தஞ்சாவூர் |
| 46) | D.I. அன்பு சுதந்திரம் | நெல்லை |
| 47) | S.டேவிட் சாந்தகுமார் | வல்லம் |
| 48) | J.K. ஜாய்ஸ் ஷகிலா | நாகலாபுரம் |
| 49) | P. ஷைனி | காங்கேயம் |
| 50) | M. ராஜா | கரூர் |
| 51) | M. ஈஸ்வரி | கரூர் |
| 52) | G. ஏஞ்சலம்மாள் | மதுரை |
| 53) | Mrs.P. சமாதானம் பீட்டர் | விருதுநகர் |
| 54) | P. ரேச்சல் ஜானிமா | நெல்லை |
| 55) | S. அசோக்குமார் பிரின்ஸ் | தூத்துக்குடி |
| 56) | S.G. சேகர் | ராணிபேட்டை |
| 57) | Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் | சேலம் |
| 58) | Mrs. காந்தா மனோகரன் | திருச்சி |
| 59) | Y. ஜெயசுதா பொன்செல்வி | சென்னை |
| 60) | Mrs.A. இமல்டா சுந்தர்சிங் | ஈரோடு |

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : **Arasaradi, Madurai**
Printed & Published by **P.C. PHILEMON RAJAH**
Printed at Classic Printers & Binders Madurai-2 📖 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th November 2024
Posted at Arasaradi HPO on 10th & 11th November 2024

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்





## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH




AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To